04.01.2023. சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை . (ஓ.எஸ்.எண். 212/2017 ) வா.சா.1. எத்திராஜ்.

குறுக்கு விசாரணை –

1) நான் எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் நக்கலமுத்தன்பட்டி கிராமத்தில் குடியிருக்கிறேன். வழக்கு சொத்து கோவில்பட்டியிலிருந்து திருவேங்கடம் செல்லும் பிரதான சாலையில் நக்கலமுத்தன்பட்டி கிராமத்தில் கிழக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண்.151/3 என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கிழக்கே பஞ்சாயத்துப் பாத்தியப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி, நீர் ஏற்றும் அறை அமைந்துள்ளது என்றால் வழக்கு சொத்திற்கு கிழக்கே மற்றொரு சர்வே எண்ணில் உள்ள நிலம் உள்ளது அதற்கும் கிழக்கே ஷை படி நீர்த்தேக்கத்தொட்டி அமைந்துள்ளது. ஷை கட்டுமானங்கள் 2007 ஆம் ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தை 2015 ல் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வே.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
04.01.2023.